# பல்லுயிர் பேணுதலில் கோணேசர் கல்வெட்டு

செல்வி: போள் யேசுகுமார் கிறிஸ்டினா நிரோஜினி
உதவி விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
மின்னஞ்சல்: nirojinic@gmail.com

## அறிமுகம்

பண்டைய மனிதர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தமையினை வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன. இலங்கை வரலாற்றில் கி.மு முதலாம் நூற்றாண்டில் பிராமிக் கல்வெட்டுக்களில் குளங்கள், கால்வாய்கள், வயல் நிலங்கள் பற்றிய செய்திகள் அதிகளவில் இடம்பெற்றன. மன்னராலும் தனிப்பட்ட மக்களாலும் பௌத்த சங்கங்களுக்கு வழங்கப்பட்ட தானங்களில் பெரும்பாலானவை குளங்களும் கால்வாய்களுமாகும்.

பௌத்த சமயம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து மன்னனாக வருகின்றவன் பௌத்த சமயத்திற்கும் நீர்ப்பாசனத்திற்கும் பணியாற்ற வேண்டும் என்ற மரபு ஏற்படுத்தப்பட்டது. இதனால் இலங்கையில் நீர்ப்பாசன விவசாயம் சிறப்புற்று விளங்கியது. நீர்ப்பாசன விவசாயத்திற்கு அடிப்படையாக குளங்கள், கால்வாய்கள் அமைந்தன. நிறுவனமயப்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வியக்கத்திற்கு செயற்கையாக அமைக்கப்பட்ட குளங்கள், கால்வாய்கள் என்பன மக்களின் ஜீவனோபாய அடிப்படையின் ஆதாரங்களாக வலுவடைந்து நீருடன் சம்பந்தமான விளைச்சல்கள் மக்களின் வாழ்வை வழிநடத்தின (கிருஷ்ணராஜா 2013:317). 13 ஆம் நூற்றாண்டில் இராஜரட்டை நீர்ப்பாசன வளர்ச்சி சீர்குலைந்தது. இதனால் இராஜரட்டையில் இருந்த மக்கள் ஈர வலயங்களை நோக்கி இடம் பெயர்ந்தனர். இதன் பின்னணியில் தனித்த வலயமாக மக்கள் குடியிருப்புக்கள் மாற்றம் கண்டன. 16 ஆம் நூற்றாண்டில் இராஜரட்டை நாகரிக பரம்பலில் இருந்து முற்றும் மாற்றமடைந்த நிலை ஏற்பட்டது.

இப்பின்னணியில் தமிழர்களின் இருப்பை வெளிப்படுத்தும் வகையில் திருகோணமலைப்பகுதியில் குளக்கோட்டன் முக்கியம் பெறுகின்றான். இவனது காலத்தில் வன்னிமையின் ஆட்சி முக்கியம் பெற்றது. குளக்கோட்டன் வழங்கிய சேவையில் நீர்ப்பாசனம் பிரதானமானது. நீர்ப்பாசன சேவையின் மூலமாக பல்லுயிர் பேணும் விடயங்கள் இவனால் மேற்கொள்ளப்பட்டன. கோணேசர் கல்வெட்டுப் பாடல்களை மையமாகக்கொண்டு வரலாற்றடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக மன்னனின் சேவையாகக் காணப்பட்ட நீர்ப்பாசனத்தின் மூலம் பல்லுயிர் பேணும் தன்மையை ஆராய்வது இவ்வாய்வின் முக்கியத்துவமாகும்.

## கோணேசர் கல்வெட்டுப்பாடலின் முக்கியத்துவம்

தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ள வரலாற்றுச் சார்புடைய நூல்களிலே கோணேசர் கல்வெட்டுத் தனித்துவமானது. இதனை கவிராஜவரோதயன் கல்வெட்டு வகைக்குரிய பாடல்களாகப் பாடினார். பல ஆதாரபூர்வமான வரலாற்றுச் செய்திகள் இதில் அடங்கியுள்ளன. திருகோணமலைப் பிராந்தியத்திலுள்ள சாசன வழக்காறுகளை இலக்கிய மரபில் பிரதிபலிக்கும் நூலாக கோணேசர் கல்வெட்டு அமைந்துள்ளது. சிலவகை இலக்கியங்களை கல்வெட்டு என்று குறிப்பிடுவது இலங்கையின் மத்திய காலத்திலிருந்து வருகின்ற பழக்கமாகும். கோணேசர் கல்வெட்டுப் பாடலின் தோற்றம் காலத்தை 17 ஆம் நூற்றாண்டுக்குரியதாக வரலாற்றுப் பின்புலங்களை வைத்துக் கருதமுடியும்.

கோணேஸ்வரர் கோவிலை அடிப்படையாகக் கொண்டு கைலாச புராணம், கோணேசர் கல்வெட்டு, திரிகோணமலைப்புராணம் ஆகிய நூல்கள் எழுந்தன. கைலாச புராணம் காலத்தால் முந்தியது. கைலாச புராணத்தில் குளக்கோட்டன், கஜபாகு மன்னர்கள் ஆற்றிய பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. கைலாச புராணத்தை விளக்கும் தொடர்ச்சியாக கோணேசர் கல்வெட்டு அமைந்துள்ளது. திருகோணமலையில் கோணேஸ்வரர் கோவிலை இடித்த பின்பு கோவிலில் இருந்த ஆவணங்கள் பல அழிவுற்றன. எஞ்சியுள்ளவற்றை சிலர் அங்குமிங்கு எடுத்துச் சென்றனர். தம்பலகாமத்தில் புதிய கோவில் அமைக்கப்பட்ட போது பழைய கோவிலுக்குரிய உடைமைகள் புதிய கோவிலுக்குரியதாகின. புதிதாக வரையறை செய்யப்பட வேண்டியதன் காரணமாக கோணேசர் கல்வெட்டு உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும் (பத்மநாதன் 2003:21). கோணேசர் கல்வெட்டில் இடம்பெறும் கதைகளை விரிவுபடுத்திச் செய்யுள் நடையில் அமைத்துக் கூறும் இலக்கியமே திரிகோணமலைப் புராணமாகும்.

## கோணேசர் கல்வெட்டுப்பாடலின் கூறப்படும் பல்லுயிர் பேணும் விடயங்கள்

கோணேசர் கல்வெட்டுப்பகுதியானது குளக்கோட்டு மன்னன் கோணேஸ்வரத்தில் மேற்கொண்ட திருப்பணிகளையும் அம்மன்னனின் திட்டங்களையும் உள்ளடக்கியதாகும். இதனை "…மலி நீர்வாவி கருமருவு முகினீர்சேர் திருக்குளஞ்செய் கருமமுமோர் கல்வெட்டாய்களறுவாமே" எனும் முதலாவது பாடல் வரி மூலம் அறிந்துகொள்ள முடியும். கோணேசர் கல்வெட்டுப்பகுதி ஆதாரபூர்வமானது என்பதை கைலாசபுரத்து திருநகரச் சருக்கம் மேல்வருமாறு வெளிப்படுத்துகின்றது.

"எழுந் தானதற்கா மிடநோக்கி
யெறிநிர் நதிபோய் மலை தாங்குங்
கொழுந்தாம னனேகங் காதவழி
கோலிப் படிக்கரை திருத்தி
விழுந் தாமரையினீர் மதகினுக்கு

விடுத்தல் பிடித்த லுறுப்பியற்றிச்
செழுந் தாமரையினீர்க் குளங்கயிலைச்
சிவகார்க் கெனக்கல் லெழுதிவைத்தான்.''

அநேக காத தூரம் வரையான குளக்கரை திருத்தப்பெற்றமை, குளத்திலிருந்து நீர்பாய்ச்சுவதற்கு தூம்புகளை அமைத்தமை, குளத்தினை கோணேஸ்வரத்திற்கு தேவதானமாகக் கொடுத்தமை, அதனைப் பற்றிய சிலாக சாசனத்தை நிறுவியமை ஆகிய நான்கும் குளக்கோட்டன் செய்த செயல்களாக கைலாசபுராணம் குறிப்பிடுகின்றது.

கோணேசர் கல்வெட்டில் கோவிலைப் பராமரிப்பதற்கு நிரந்தர வருவாய் வரக்கூடிய வழிவகைகளை மேற்கொண்டான். ஆற்றுநீரும் வேற்றுநீரும் ஊற்றுநீரும் தங்க நிறைந்திருந்த குளங்களையும் காடுகளையும் திருத்தி வயல்வெளிகளை அமைத்து கோணேச்சரக் கோவிலின் இறைவனுக்கு வழங்கினான். இதனை ''.... தெரிந்த புகழ்த் திருக்குளமும் வயல்வெளியும் திருத்தி அமரர்க்கென ஈந்து'' எனும் கல்வெட்டுப்பாடல் எடுத்துக் காட்டுகின்றது (பாடல்:4).

குளக்கோட்ட மன்னன் சிறப்பு வாய்ந்த கோணேஸ்வரர் கோவில் குளத்தின் (கந்தளாய் குளம்) திருப்பணிகளை நான்கு வருடங்களில் நிறைவேற்றினான். குளத்திற்கு மகாவலிகங்கை நீரைக் கொண்டுவந்து பல திசைகளுக்கும் நீரைப்பரப்பச் செய்தான். நீர் பெருகும் போது நீரை வெளியேற்ற மதகு அமைக்கப்பட்டது. இதனை

''மேலான திருக்குளமும் இதற்கடுத்த நானாண்டில் விளங்கச் செய்து
சேல் பாயும் மகாவலி நீர் வரவழைத்துத் திசைபரவும் சிறப்பும் கண்டு
நீலான நீர் மிகுதிவர வெகுவி மதகு திறப்பது யாரென்று
பாலாழி தனிற் துயிலும் பச்சைமுகில் தனை நினைத்தானன் பரிதி வேந்தன்''

எனும் கல்வெட்டுப் பாடல் எடுத்துக் காட்டுகின்றது (பாடல்:23). குளத்தில் நிறைந்துள்ள நீர் மிகுதியால் குளத்தைக் காத்தருள வேண்டுமென இறைவனை வேண்டியதாக கல்வெட்டுப் பாடல் குறிப்பிடுகின்றது (பாடல்:24). திருமால் தவளை உருவில் மதகைத் திறந்ததாக ஐதீகமுண்டு. மதகின் கதவு திறக்கப்பட்டபோது கோவிலைச்சுற்றி நீர் பாய்ந்து பரவி வயல்களெங்கும் நீர் பரவியதாக ''... பால்போலத் திரைகொளித்துப் பழனமெங்கும் பரவிநிற்கும் பான்மை கண்டு...'' எனும் கல்வெட்டுப் பாடல் குறிப்பிடுகின்றது (பாடல்:26). குளங்களில் தேக்கிவைக்கும் நீரை பாசனத்திற்குத் திறக்க அறிவியல் பூர்வமாக அமைக்கப்பட்ட ஒரு அமைப்பு மதகாகும். தேவையான அளவு மட்டும் தண்ணீரை வெளியேற்ற இது உதவும்.

குளக்கட்டைப் பாதுகாக்க காவற் தெய்வங்களைக் கட்டளையிட்டான். காவற் தெய்வங்களுக்கு ஒரு வருடம் பழம், பாக்கு, வெற்றிலை முதலியவற்றால் மடையுமிட்டு தூபமிட்டுப் பூஜை செய்தனர். பச்சைப் பட்டுக்கட்டி மடையிட்டால் வயலில் நல்ல மழை பொழியும் எனவும் சிவப்புப் பட்டுக்கட்டி பூஜை செய்தால் மிகுந்த வெயிலெறிக்குமெனவும் மக்கள் நம்பினர்.

கோணேஸ்வரத்துக்கு வந்து பட்டுக்கட்டி நேர்கடன் செய்து பலனைப் பெறும் நம்பிக்கை மக்களிடம் காணப்பட்டது. 1985 இல் இடம்பெற்ற வெள்ளத்தால் ஊர், உயிர்கள், சொத்துக்கள் அழிக்கப்பட்டமைக்கு காரணம் தெய்வக் கடமையை நிறைவேற்றாமையென மக்கள் நம்பினர்.

இயற்கை வளமான காட்டை அழித்து அதன் மூலம் மக்கள் நலன்பேணும் விவசாயத்தை உருவாக்கினான். நீரை திறம்படப் பயன்படுத்துவதால் வேளாண்மை செய்தனர். 2700 அவணம் நெல்லை விதைப்பதற்குத் தேவையான விளைநிலத்தை உண்டாக்குவதற்காக காடுகளை வெட்டி திருத்தினான் என்பதை "தானிரண்டாயிரத்தெழுநூறு அவண விதைப்புத் தரையை தான் செய்வித்து தேனிருக்கு மலர்க்காடு வெகுவாகத் திருத்துமெனத் திட்டம் பண்ணி…" எனும் கல்வெட்டுப்பாடல் மூலம் அறியலாம் (பாடல்:33).

கோவில், குளம், விவசாய நிலம் என்பவற்றைப் பாதுகாக்க மக்கள் பணிக்கப்பட்டனர். காரைக்காலில் இருந்து அழைத்து வரப்பட்ட வரிப்பத்தார் எனப்படும் குடிமக்கள் செய்ய வேண்டிய தொழும்புகளில் சிறப்பு வாய்ந்த நல்ல பட்டு வஸ்திரங்களை கொய்து பிடித்தல், பட்டுக்கட்டல் பூக்களை பறித்தல், தினமும் நெல்லுக்குற்றி அரிசி சேர்த்தல் என்பன முக்கிய பணிகளாகும். இதனை "… நன்னயஞ்சேர் பட்டாடை கொய்தலோடு பத்திர புஷ்பமெடுத்தல்… உன்னதமாய் நெல்தனை குத்தல்" எனும் கல்வெட்டுத்தொடர் புலப்படுத்துகின்றது (பாடல்:8).

இக்குடிமக்கள் திருக்கோணேஸ்வரத்திற்கு செய்யும் பணிகளுக்காக நீர்ப்பாய்ச்சலுள்ள பள்ளவெளி எனப்படும் நெல்விளையும் வயல்களை அவர்களுக்கு மானியமாக குளக்கோட்ட மன்னன் வழங்கினான். இதனை "நீர்பாயும் பள்ளவெளி நெல்விளையும் தரை அவர்க்கு நிசமாய் ஈந்து…" எனும் கல்வெட்டுப் பாடல் மூலம் அறியலாம் (பாடல்:10).

கட்டுக்குளப்பற்று பிரிவில் வகுக்கப்பட்ட பிரிவினர் ஆறு அவணம் சுத்தமான நெல், பால், நெய், தயிர் என்பவற்றை ஆலயத்தில் ஒப்படைக்க வேண்டுமென மன்னன் கூறினான். இதனை "சுத்த நெல்லு ஆங்கு ஒப்புவித்தல்" எனும் கல்வெட்டுத் தொடர் விளக்குகின்றது (பாடல்:15). கொட்டியாரப்பற்றில் நான்கு காதவழி தூரத்திற்கு உற்பத்தி விளைவுகளை உண்டாக்கி கோணேஸ்வரப் பெருமாள் கோவிலுக்கு குளக்கோட்டன் மேலதிகமாகக் கொடுத்தான். கொட்டியாரப்பற்று மக்கள் கோவிலுக்கு பாக்கும், வெற்றிலையும், வாழைப்பழமும், சந்தனமும், பால். தயிர், நெய் 100 அவணம் அரிசி என்பவற்றை மனமுவர்ந்து கொடுக்க வேண்டுமென கட்டளையிட்டான். இதனை "…வெள்ளிலையும் அருங்கதலிக் கனியும் சாந்தும் ஊனமறு பால் தயிர் நெய் அரிசி ஒரு நூறு அவணம் உகந்தே ஈதல்" எனக் குறிப்பிடுகின்றது (பாடல்:16)

இயற்கையை மதிக்க வேண்டும், பாதுகாக்க வேண்டும், கருத்தாய் இருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. குளத்திற்கு அழிவையும் வயல்வெளிகளை தாங்களே சுவீகரித்துக்

கொள்ளும் பேராசையால் கோணேஸ்வரத்திற்கு சேர வேண்டிய விளைவுகளுக்கு அழிவைச் செய்வோரின் பெருமைகள் இழந்து நிற்பது நிச்சயம் எனவும் குறிப்பிடுகின்றது. இதனை "பேறான பெரியோரே இதற்கழிவு நினைத்தவர்கள் பெட்பு நீங்கி நீறாகப்போவர் இது நிச்சயம் நிச்சயம் கோணை நிமலர் ஆணை" எனக் குறிப்பிடுகின்றது (பாடல்:44).

'பிற உயிர்களை நேசிக்க வேண்டும்' என்ற கருத்துரைக்கப்பட்டது. ஆலயத்தில் வேலை செய்கின்ற மக்கள் உயிர் பறிக்கும் குற்றம் செய்தால் மரண தண்டனை கொடுக்க வேண்டுமென வன்னிமைக்கு கட்டளையிட்டதாக கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. இதனை "சுத்தமிகு வன்னிமையே… உயிர்க்குயிரே வாங்கு" எனும் கல்வெட்டுத்தொடர் எடுத்துக்காட்டுகின்றது (பாடல்:13).

## முடிவுரை

திருகோணமலையில் சிறப்புற்ற கோயிலாக திருக்கோணேஸ்வரர் கோயில் இருந்தது. சமயத்துக்கும் அரசியலுக்கும் இடையிலுள்ள தொடர்பை "வையமகிழ் வன்னிமையே இன்னும் கேளாய் மனுநீதி…. மையனைய கண்டர் திருக்கோணைநாதர் மகாபூசைத் திருப்பணியும் வழங்கச் செய்யே" எனும் கல்வெட்டுப் பாடல் புலப்படுத்துகின்றது (பாடல்:14). இதன் மூலம் அரசன் அனைத்திற்கும் பொறுப்புடையவனாக காணப்பட்டான் என்பதை வலியுறுத்துகின்றது.

மக்கள் நலன் பேண குளத்தை நிறுவிதுடன் அதனைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தான். கோயிலுக்கு தொழும்பு செய்ய குடிமக்கள் பணிக்கப்பட்டனர். குடிமக்களை திருப்தி செய்ய மன்னன் நிலங்களை வழங்கினான். அதன் வருவாயைக்கொண்டு அவர்கள் வாழ்ந்தனர். இவ்வாறு மக்களின் உணவுத்தேவையை பூர்த்தி செய்ய இயற்கையின் நிலப்பரப்பை மாற்றியமைக்கின்ற போக்கு காணப்பட்டது. ஆனாலும் பல்லுயிர் பேணும் தன்மை ஏற்படுத்தப்பட்டது. குளத்தைப் பாதுகாக்க காவல் தெய்வங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள், தொழும்புகளால் ஆலயத்திற்கு வழங்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் உயிர்களை அழிக்காமல் இயற்கையின் பலன்களைச் சார்ந்து நிற்பதன் மூலம் பிற உயிர் பேணும் பண்பு புலப்படுத்தப்படுகின்றது.

## உசாத்துணை

1. வடிவேல்.இ., 1993, கோணேசர் கல்வெட்டு, இந்து சமயத் திணைக்களம், கொழும்பு.
2. சோமாஸ்கந்தர்.வை., ஸ்ரீஸ்கந்தராசா.அ., 1963, திருக்கோணேஸ்வரம், ஸ்ரீலங்கா அச்சகம், யாழ்ப்பாணம், பக். 44-48
3. பத்மநாதன்.சி., 2004, ஈழத்து இலக்கியமும் வரலாறும், குமரன் பதிப்பகம், இலங்கை, பக். 13-26

4. கிருஷ்ணராஜா.செ., 2012, இலங்கைப் பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள் பாகம் I (கி.பி 1500 ஆண்டுகள் வரை), AB Creator & Publishers, கொழும்பு, பக். 317-325